பெரியார் பல்கலைக்கழகம்
**PERIYAR UNIVERSITY**
**SALEM – 636 011, TAMIL NADU**
**NAAC A++ Grade – State University – NIRF Rank 59 – NIRF Innovation Band of 11-50**

கலைஞர் 100
1924 - 2023

முனைவர் S.கதிரவன்
தேர்வாணையர் (முகூபொ)
No.PU/COE/CRE-VIII/M.PHILSpl.Exam. /23F76498/2023, dt.28 .08.2023

பெறுதல்

முதல்வர்
பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்ற ஆய்வியல் நிறைஞர் பாடப்பிரிவுள்ள கல்லூரிகள்

ஐயா/அம்மையீர்,

பொருள்: ஆய்வியல் நிறைஞர் (M.Phil) – தேர்ச்சி பெறாமல் மற்றும் தேர்வு எழுதுவதற்குரிய காலம் கடந்த ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்களுக்கு சிறப்பு (M.Phil Special Examination) – தகவல் தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை: 1. ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதங்கள்.
2. குறிப்பாணையின் நாள்: 28.08.2023.

*****

பார்வை(2)–இல் கண்டுள்ள குறிப்பாணையின்படி, பெரியார் பல்கலைக்கழக இணைவுபெற்ற கல்லூரிகளில் முழுநேரம் பயின்ற ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்கள், தங்களது படிப்பை மூன்று வருடத்திற்குள் முடிக்காமல் நிலுவைத்தாள் வைத்துள்ளவர்களுக்கு மற்றும் பகுதிநேரம் பயின்ற ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்கள் தங்களது படிப்பை நான்கு வருடத்திற்குள் முடிக்காமல் நிலுவைத்தாள் வைத்துள்ளவர்களுக்கு சிறப்புத்தேர்வு நடைபெற உள்ளது என தெரிவித்துக் கொள்ளப்பணிக்கப்பட்டுள்ளேன்.

அதன்படி, இச்சிறப்பு தேர்விற்கு விண்ணபிக்கும் மாணாக்கர்கள் வழக்கமான கீழ்கண்டுள்ள தேர்வு கட்டணங்களுடன் ஒறுப்புக் கட்டணமாக முழுநேர மாணாக்கர்களுக்கு ஒரு தாளிற்கு ரூ.3,000 /– வீதமும், பகுதிநேர மாணாக்கர்களுக்கு ஒரு தாளிற்கு ரூ.4,000/– வீதமும் செலுத்த வேண்டும்.

மேலும், அனுமதிக்கப்பட்ட குறைந்த பட்ச படிப்புக்காலம் (minimum period for completion) முடிந்த தேதியிலிருந்து ஒரு மாதத்திற்கு ரூ.600/– வீதம் ஒறுப்புக் கட்டணம் மற்றும் சிறப்பு அனுமதி கட்டணம் ரூ.1,000/– மும் செலுத்த வேண்டும். ஆய்வேட்டினை சமர்ப்பிக்க **இறுதி நாள்: 29.09.2023.**

இச்சிறப்பு தேர்வுக்கான விண்ணப்பங்கள் **01.09.2023 முதல் 29.09.2023** வரையில் www.periyaruniversity.ac.in என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தேர்வு விண்ணபங்கள் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க **இறுதி நாள்:29.09.2023** என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகின்றது.

**கட்டண விபரங்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | தேர்வு விண்ணப்ப படிவக்கட்டணம் | ரூ.50/– |
| 2. | மதிப்பெண் பட்டியல் கட்டணம் (எழுத்து தேர்விற்கு) | ரூ.100 X 1 |
| 3. | மதிப்பெண் பட்டியல் கட்டணம் (வாய்மொழித் தேர்விற்கு) | ரூ.100 X 1 |
| 4. | தேர்வு கட்டணம் ஒரு தாளிற்கு | ரூ.400/– |

இச்சிறப்பு தேர்விற்கான பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் கல்லூரி முதல்வர் வழியாக பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்படவேண்டும். கட்டணத்தை கனரா வங்கி இரசீது (Canara Bank Challan) வாயிலாகவோ அல்லது ஏதேனும் தேசிய மையமாக்கப்பட்ட வங்கி வரைவோலையாக (**"பதிவாளர், பெரியார் பல்கலைக்கழகம், சேலம்"** என்ற பெயரில் சேலத்தில் மாற்றத்தக்கதாக இருத்தல் வேண்டும்) செலுத்தலாம்.

இச்சிறப்பு தேர்விற்கான கால அட்டவணை (Examination Time table) மற்றும் தேர்வு மையம்(Examination Centre) விபரம் பின்னர் தெரிவிக்கப்படும்.

28/8/23

**தேர்வாணையர்**

28-8-23 28/8/23 28/8/23